Legislative Assembly (Thumping of desks) under Article 191(2) of the Constitution of India read with Clause (a) of sub-para (1) of paragraph 2 of the Tenth Schedule and accordingly Thiru Azhagu Thirunavukkarasu has ceased to be a member of the Tamil Nadu Legislative Assembly with immediate effect; and (Thumping of desks)

(ii) that the seat held by him in the Tamil Nadu Legislative Assembly, shall thereupon fall vacant according to the provisions of Article 190(3)(a) of the Constitution of India.

Copies of the detailed order will be forwarded to the Respondent, namely Thiru Azhagu Thirunavukkarasu and the petitioner Thiru A. Subburathinam as well as to the Legislature Party Leader of the political party. It shall be notified and published in the Extra-ordinary issue of the Gazette of Tamil Nadu.

An Information Sheet, as required under the rules shall be issued to the Members.

முற்பகல் 11–50

5. சிறப்புக் கவன ஈர்ப்பு

இராமேஸ்வரம் கடலில் கடத்தப்பட்ட மீனவர்களை மீட்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சிறப்புக் கவன ஈர்ப்பு. இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் அருகில் கடலில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் கடத்தப்பட்டது பற்றிய பிரச்சினையைப் பேரவையில் எழுப்பி அரசின் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டுமென்று திரு. ஜி. பழனிசாமி, திரு. இரா. தாமரைக்கனி, திருமதி கே. மரியம் உல் ஆசியா ஆகியோர் என்னிடத்தில் ஓர் அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடு) இது இராமேஸ்வரம் பற்றிய பிரச்சினை. உறுப்பினர் பிரச்சினை அல்ல. இது பற்றிய பிரச்சினையை அரசின் கவனத்திற்குக் கொண்டுவரக் கேட்டுக்கொள்கிறேன். திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இராமேஸ்வரத்தில் 15 விசைப் படகுகளில்

மீன்பிடிப்பதற்காகச் சென்றிருந்த சுமார் 62 மீனவர்கள் இலங்கையைச் சேர்ந்த......(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பழனிசாமி, உட்காருங்கள். உறுப்பினர்களுக்கு திடீரென்று ஒரு சந்தேகம் வந்திருக்கிறது. பீட்டர் அல்போன்ஸ் பிரச்சினையில் பேரவை முன்னவர் அவர்கள் கொண்டுவந்த தீர்மானம் நிறைவேறியது என்று நான் அறிவித்தவுடன், அவர் பேரவையிலேயிருந்து இந்த எஞ்சிய கூட்டத்தொடருக்கு நீக்கப்பட்டுவிட்டார் என்று தான் அர்த்தம். நான் வேறு அறிவிக்க வேண்டிய அவசியம் இல்லை. நானாக நடவடிக்கை எடுத்தால்தான் எஞ்சிய கூட்டத்தொடருக்கு அவரை அவையிலேயிருந்து நீக்கி வைக்கிறேன் என்று அறிவிப்பது. இது நீங்கள் எல்லாம் சேர்ந்து எடுத்த முடிவு. நீங்கள் எடுத்த தீர்மானம் நிறைவேறியது என்று நான் அறிவித்துவிட்டேன். ஆகவே நான் அறிவிப்பதற்கு என்று ஒன்றுமில்லை. நீங்களே அவரை வெளியேற்றிவிட்டீர்கள், அவ்வளவுதான். பேரவையே வெளியேற்றியது. நான் அறிவிக்கவேண்டுமென்று சிலர் கேட்கிறார்கள். (குறுக்கீடு) நீங்களே அறிவித்துக்கொண்டீர்களே, எனக்கு அதிலே வேலை இல்லை. அவ்வளவுதான்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 62 மீனவர்கள் 15 விசைப் படகுகளில் மீன் பிடிப்பதற்காக சென்றிருக்கிறார்கள். 62 மீனவர்களை, அநேகமாக விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சார்ந்தவர்கள், கடத்திச் சென்று, அவர்கள் கொண்டு சென்ற அந்த மீன்பிடி வலைகள் போன்றவற்றை எல்லாம் இந்த நேரத்திலே அவர்கள் பறிமுதல் செய்திருக்கிறார்கள். அதற்குப் பின்னால் 4 படகுகளில் 62 மீனவர்கள் தமிழ்நாட்டிற்கு திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறார்கள். அதிலே 11 படகுகளை தங்கள் வசமாக இந்த நேரத்திலே வைத்திருக்கிறார்கள். அடுத்ததாக அவர்கள் கடத்திச் சென்ற மீனவர்களிடத்திலே அங்கே இருக்கக் கூடிய தீவிரவாதிகள் ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். விடுதலைப் புலிகளுடைய அந்தப்படகில், தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய கடலோர காவலர்கள் 6 படகுகளை பறிமுதல் செய்த காரணத்தால் அவர்களுக்கு பல்வேறு தடவை அரசிடத்திலே, அதிகாரிகளிடத்திலே கோரிக்கை கொடுத்ததனால், அந்தப் படகுகளை திருப்பி அனுப்பவில்லை என்ற காரணத்தால், தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய மீனவர்கள் ஏற்கெனவே நாகப்பட்டினம் கடற்கரையிலிருந்து 19 மீனவர்களை கடத்திச் சென்று, அரசு எடுத்ததன் மூலமாக பின்பு அவர்கள் விடுவிக்கப்பட்டார்கள். மீண்டும் இந்த நேரத்தில் 62 மீனவர்களை அழைத்துச்சென்று விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள்.

1995 ஏப்ரல் 20] [திரு. ஜி. பழனிசாமி]

முற்பகல் 11–55

இது தமிழ்நாட்டில் தொடர்ச்சியாக நடைபெறுகிற சம்பவமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதுபோன்று மீனவர்கள் பாதிக்கிற பொழுது, இலங்கை ராணுவத்தினர் சுடுகிற பொழுது, இது போன்ற பிரச்சினை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படுகிறபொழுது நம்முடைய மீனளத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இது குறித்து மத்திய அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று இருப்பதாகவும், மத்திய அரசு உரிய நடவடிக்கையை எடுத்து வருவதாகவும், இந்த அவையிலே பல தடவை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நிரந்தரமாக ஆயிரம் கிலோ மீட்டர் நீண்டிருக்கிற கடல் ஓரத்தில் பல லட்சக்கணக்கான மீனவர்கள் இன்றைக்கு அச்சத்தோடு தங்களுடைய வாழ்க்கையில் மீன் பிடிக்கிற தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இதன் மீது தமிழக அரசு மத்திய அரசிடமிருந்து நிரந்தரமாக அச்சமின்றி அவர்கள் மீன் பிடிப்பதற்கு உத்தரவாதம் ஏதாவது ஏற்படுத்துவதற்கு அரசிடத்திலே திட்டம் இருக்கிறதா; அதற்கான முயற்சிகளை, மீனவர்கள் பாதுகாப்பிற்காக அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்து இருக்கிறதா?. அமைச்சர் அவர்கள் கூட பல தடவை இந்த அவையிலே தெரிவித்திருக்கிறார்கள். தொலை தூரம் சென்று மீன் பிடிக்கக் கூடிய மீனவர்களுக்கு ஒயர்லெஸ் மூலமாக தகவல் கொடுத்து, யார் பிடிக்கிறார்கள் என்ற தகவல் கொடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்கள். ராமேஸ்வரம் நாகப்பட்டினம் கோடியக்கரை போன்ற இடங்களில் இதற்கான வசதிகளை ஏற்படுத்தி தருவதாக நம்முடைய மாண்புமிகு மீளைத் துறை அமைச்சர் அவர்கள் ஒப்புதல் தெரிவித்தார்கள். அதன் மூலமாக, நம்முடைய கடத்திச் சென்ற மீனவர்கள் சம்பந்தமாக தகவல்ஏதாவது அமைச்சருடைய கவனத்திற்கு வந்திருக்கிறதா? நாள்தோறும் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாமல் தடுப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதற்கு மாண்புமிகு மீளைத் துறை அமைச்சர் அவர்கள் உரிய பதிலை அளிக்க வேண்டும். மீனவர்கள் அச்சம் இன்றி மீன் தொழிலில் ஈடுபட்டு மீன் பிடிப்பதற்கு, வாழ்க்கை நடத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இரா. தாமரைக்கனி, சுருக்கமாகப் பேசவும்.

[*1995 ஏப்ரல் 20*

திரு. இரா. தாமரைக்கனி: 17-4-1995ஆம் தேதி இராமேஸ்வரம் கடற்கரை, கச்சத் தீவுக்கு அருகிலே மீன் பிடிக்கச் சென்ற 58 மீனவர்களை விடுதலைப் புலிகள் பிடித்துச் சென்றிருக்கிறார்கள். ஒன்று விடுதலைப் புலிகள் பிடித்துச் செல்வது அல்லது இலங்கை கடற்படையினர் பிடித்துச் செல்வது என்று பல தடவை இப்படி பிடித்துக் கொண்டு செல்வது, சட்டசபையில பேசுவது, முதலமைச்சருக்கு தகவல் கொடுப்பது, பிரதமருக்கு தகவல் கொடுப்பது, பிடித்துக் கொண்டு போவது, பழையபடி திருப்பிக் கொண்டு வருவது என்று இது வாடிக்கையாகவே போய் விட்டது. ஆகவே-நிரந்தரமாக மீனவர்களை பிடிக்காமல் இருப்பதற்கு-விடுதலைப் புலிகளாலும், இலங்கை கடற்படையினராலும் பிடித்துக்கொண்டு போகாமல் இருப்பதற்கு--ஒரு நிரந்தர தீர்வு காண வேண்டும். சமீபத்திலே கூட பிடித்துக் கொண்டு போகும்போது, கடல் ஓர காவல் படை என்ன செய்துக் கொண்டிருந்தது என்பது தெரியவில்லை. ஆகவே மாநில சர்க்கார், மத்திய சர்க்காருக்கு முறைப்படி தெரிவித்து கடல் ஓர ரோந்துப் படைகளை இன்னும் அதிகப்படுத்தவும், அது மட்டும் அல்லாமல் அங்கே கவனக் குறைவாக இருந்த ரோந்துப் படையினர் மீது நடவடிக்கை எடுப்பதற்கும், மாநில சர்க்கார் மத்திய சர்க்காரைக் கேட்டுக் கொள்ள வேண்டும். சமீபத்திலே கூட மத்திய சர்க்காருடைய ஒரு செய்தியில் மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கும்போது ஏதாவது ஆபத்து ஏற்பட்டால், கரைக்கு தெரியப்படுத்துவதற்கு, மைய அரசு ஒரு வாக்கி டாக்கி கொடுப்பதற்கும் உயர் அலை வரிசை கோபுரம் ஏற்படுத்துவதற்கும் உத்திரவு இட்டிருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். தூத்துக்குடி நாகப்பட்டினம் போன்ற கடற்கரை பகுதிகளில் தான் உயர்அலை வரிசை கோபுரமும், வாக்கி டாக்கி கொடுப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ராமேஸ்வரம் கடற் பகுதிக்கு இது ஒதுக்கப்படவில்லை. ஆகவே மாநில சர்க்கார் உயர் அலை வரிசை கோபுரம் அமைக்கவும், ஒவ்வொரு மீனவருக்கும் வாக்கி டாக்கி கொடுப்பதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும். ஒவ்வொரு கடற்பகுதிக்கும் 100 அல்லது 120 வாக்கி டாக்கி தான் கொடுத்திருப்பதாக அறிகிறோம். ஆகவே ஒவ்வொரு மீனவருக்கும் ஒரு வாக்கி டாக்கி இருக்கிற மாதிரி ஏற்பாடு செய்யவேண்டும். மீனவ சங்கங்கள் மூலமாக (குறுக்கீடு) வாக்கி டாக்கி கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். மீனவர்கள் அடிக்கடி விடுதலைப் புலிகளாலும் இலங்கையில் உள்ள......

1995 ஏப்ரல் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மீனவர்கள் காணாமல் போயிருக்கிறார்கள் என்பதைப் பற்றி மட்டும் பேசுங்கள். அது பற்றி உங்களுடைய கருத்துக்களையெல்லாம் இதிலே கொண்டுவர வாய்ப்பில்லை. இது ஸ்பெஷல் மென்ஷன் தான். ஒத்திவைப்புத் தீர்மானம் எடுக்கவில்லை.

திரு. இரா. தாமரைக்கனி: இலங்கை கடற்படையினரும் தமிழ்நாட்டு மீனவர்களை அடிக்கடி பிடித்துக் கொண்டு போவதால் மிகவும் சிரமப்படுகிற காரணத்தால் அவர்கள் மீன் பிடிக்கிற தொழிலையே மறந்து விடக் கூடிய சூழ்நிலை உள்ளது. ஆகவே நிரந்தரப் பாதுகாப்பு மீனவர்களுக்கு கிடைப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

நண்பகல் 12–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி கே. மரியம் உல் ஆசியா.

***திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அலை கடலில் மீன் பிடித்துச் செல்லும் மீனவர்களை அடிக்கடி பிடித்துப் போவது, தாக்கப்படுவது என்பது தொடர் கதையாய் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அந்தக் காலத்திலே, இலங்கை, பர்மா, மலேசியா போன்ற நாடுகளுக்கு ரப்பர் தோட்டங்களுக்கு கூலி வேலைகளுக்காக இங்குள்ள தமிழர்கள் கங்காணிகளால் அழைத்துச் செல்லப்படும்பொழுது, தமிழர்கள் விட்ட கண்ணீரினால் தான் கடல் நீர் உப்பானதாக பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்களே, இன்று மீனவர்கள் விடுகின்ற கண்ணீரால் கடல் நீரின் உப்புத் தன்மை அதிகரித்து விட்டது என்று சொல்லக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கின்றது. ராமநாதபுரம் மாவட்டத்தில் மீனவர்கள் மீன் பிடிக்கும் தொழிலையே விட்டு விடக்கூடிய நிலைமைக்குத் தள்ளப்பட்டு இருக்கின்றார்கள். வடமேற்கு இந்தியாவிலும், வட இந்தியாவின் எல்லையோரப் பகுதிகளிலும் கடத்தப்படுகின்ற இந்தியர்களைக் காப்பாற்றுவதற்கு விரைந்து, துரிதமான நடவடிக்கை எடுக்கும் மத்திய அரசு, தமிழக மீனவர்கள் தொடர்ந்து நடுக் கடலில் ஜீவ மரணப் போராட்டம் நடத்திக் கொண்டிருப்பதை சுட்டிக்காட்டி, மீனவர்களைக் காப்பாற்றுவதற்காக, மீனவர்களின் உற்ற பாதுகாவலராக விளங்கும் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தவும், மத்திய அரசு மாற்றந்தாய் மனப்பான்மையுடன் நடந்து

கொண்டிருக்கின்றது. இந்தியக் கடற்படையினர் சரியான நடவடிக்கை எடுத்திருந்தால் இது போன்ற சம்பவங்கள் நடைப்பெற்றிருக்காது. ஆகவே, தமிழக மீனவர்களை காப்பாற்றுவதற்காக நிரந்தரமான, உறுதியான நடவடிக்கையை துரிதமாக எடுக்குமாறு மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 17-4-1995 மற்றும் 19-4-1995 அன்று அதிகாலை சுமார் 6 மணியளவில் ராமேஸ்வரத்திலிருந்து 15 மீன்பிடி விசைப் படகுகளில் 62 மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கச் சென்றுள்ளார்கள். இவர்கள் தனுஷ்கோடி பகுதிக்கு அருகே கடலில் மீன்பிடித்து, தொழிலில் ஈடுபட்டு இருந்தபோது, தமிழ் ஈழப் போராளிகள் மாலை சுமார் 5½ மணியளவில் அதிவேக கண்ணாடி இழை படகில் வந்து நமது மீனவர்களைச் சூழ்ந்துகொண்டு, 15 படகுகளுடன் 60 மீனவர்களையும் இலங்கைக்குப் பிடித்துச் சென்றதாக ராமேஸ்வரத்திலிருந்து மீன் துறை உதவி இயக்குநர் அவர்கள் கொடுத்த தகவலின்படி நமது மீனவர்களை ஈழப் போராளிகள் கடத்திச் சென்றபோது, வேறு ஒரு படகில் மீன் பிடித்துக் கொண்டிருந்த படகின் சொந்தக்காரரான திரு. எட்வர்ட் என்ற மீனவர் பார்த்துவிட்டதாகவும், அவர் தப்பித்து வந்ததாகவும், ராமேஸ்வரம் மீன் துறை அலுவலகத்தில், மீன் துறை உதவி இயக்குநரிடம் தெரிவித்தார். இத்தகவல் அரசுக்குக் கொடுக்கப்பட்டவுடன், மீனவர்களின் காவல் தெய்வமாகவும், மீனவர்களுக்கு ஒரு இன்னல் என்றால் உடனடியாக துடிதுடித்துப்போய், அந்த இன்னலைக் களைந்து உடனடியாக நீக்க வருகின்ற ஆற்றல் மிக்க இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதல் அமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் போர்க்கால உத்தரவின் அடிப்படையில் மீன் துணை ஆணையாளர், கால்நடை மற்றும் மீன்வளத் துறை செயலர், பொதுத் துறை செயலர் மற்றும் தலைமைச் செயலர் உடனடியாக மைய அரசுடன் தொடர்பு கொண்டு, அங்கு மீனவர்களையும், அவர்களது விசைப் படகுகளையும் இலங்கை அரசின் உதவியுடன் விடுவித்து, மீட்டு வரவும், கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவருடனும் தொடர்பு கொண்டு மீட்புப் பணிளைத் துரிதமாகத் தொடங்கிடவும், ராமநாதபுரம் ஆட்சித் தலைவருக்கும் இது குறித்துத் தெரிவிக்கப்பட்டு மீனவர்கள் கிராமங்களில் பிடிப்பட்ட நமது மீனவர்களின் படகுகளை பத்திரமாக மீட்டு வர அனைத்து நடவடிக்கைகளையும் போர்க்கால

அடிப்படையிலே தமிழகத்தினுடைய முதல் அமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு துரிதமாக நடவடிக்கை எடுத்து வருகின்ற இந்த வேளையில் நேற்று இரவு 11 மணியளவில் ஈழப் போராளிகளால் கடத்தப்பட்டு நடுகுடா மற்றும் நச்சுக்குடாப் பகுதியில் சிறை வைக்கப்பட்ட மீனவர்களை, ஈழப் போராளிகளிடமிருந்து விடுவித்தனர். மீனவர்களைப் பாதுகாப்பாக அவர்களுடைய இல்லங்களிலே ஒப்படைத்துவிட்ட காரணத்தினால் இந்த அவையை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொல்லி....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒத்திவைக்க வேண்டுமென்று அவரே சொல்லவில்லை, உங்களுடைய கவனத்திற்குத்தான் கொண்டுவந்து இருக்கிறார்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு நான் அனுமதி கொடுக்கவில்லை. உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்காக சிறப்புக் கவன ஈர்ப்புதான். நீங்கள் அதற்குப் பதில் சொன்னால் போதும்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதன் பிறகு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் பேசும்போது, இது குறித்து நிரந்தரமாக பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்ற கருத்தைச் சொன்னார்கள். நம்முடைய ஆற்றல் மிக்க தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கடந்த 4 ஆண்டு காலத்தில் எந்த அளவுக்கு போர்க்கால அடிப்படையிலே நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு வருகின்றார்கள் என்பதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் நிச்சயமாக அறிவார்கள் என்றே நான் கருதுகிறேன். நம்முடைய ஆற்றல்மிக்க புரட்சித் தலைவி அவர்கள் எடுத்து வருகின்ற அந்த போர்க்கால நடவடிக்கையின் காரணமாகத்தான் சமீபத்திலே பாராளுமன்றத்திலே இது தொடர்புடைய அந்தத் துறையினுடைய அமைச்சர் அவர்கள் பேசும்பொழுது இலங்கை அரசும், இந்திய அரசும் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கூட்டு ரோந்து (ஜாயிண்ட் பெட்ரோலிங் சிஸ்டம்) என்று சொல்லக் கூடிய ஒரு கூட்டு ரோந்தை ஏற்படுத்தும் என்ற உத்திரவாதத்தை நம்முடைய ஆற்றல்மிக்க புரட்சித் தலைவி அவர்கள் எடுத்த நடவடிக்கையின் காரணமாக, மத்திய அரசு அந்த உத்திரவாதத்தை அளித்திருக்கிறது.

அந்த அடிப்படையிலே, எதிர்காலத்திலே இது போன்ற இந்த ஜாயிண்ட் பெட்ரோலிங் சிஸ்டம் அமைந்துவிட்டால் எந்த ஒரு பிரச்சினையும் இருக்க முடியாது என்று நான் கருதுகிறேன்.

பிற்பகல் 12-05

அதுமட்டுமல்ல. நம்முடைய படகுகளை மீட்பதற்கு கடந்த காலத்திலே *1983*ஆம் ஆண்டிலிருந்து இந்தப் பிரச்சினைகள் இருந்துகொண்டிருக்கின்றன. அப்போதெல்லாம் நம்முடைய மீனவர்கள் இலங்கை அரசினுடைய கடற்படையாலும் அங்குள்ள தீவிரவாத அமைப்புகளாலும் கடத்தப்படுகின்ற சூழ்நிலையில் அங்கிருந்து மீனவர்கள்தான் திரும்பி வருவார்களே ஒழிய படகுகள் வந்ததாக சரித்திரம் இல்லை. ஆனால் நம்முடைய ஆற்றல் மிக்க இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எடுத்து வருகின்ற அந்த நடவடிக்கைகள் காரணமாகத்தான் சமீபத்திலே பிடிப்பட்டிருக்கின்ற அந்தப் படகுகளைக்கூட தற்போது மீட்டு வருகின்ற ஒரு சூழ்நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே நம்முடைய மீனவர்களுடைய படகுகளையும் கொண்டுவருவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் பேசும்போது வாக்கி-டாக்கி ஸிஸ்டத்தைப்பற்றிச் சொன்னார்கள். இந்தியாவிலேயே நம்முடைய ஆற்றல் மிக்க தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆளுகை செய்கின்ற இந்த அரசிலே தான் எந்த ஒரு மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு தூத்துக்குடியிலும், நாகப்பட்டினத்திலும் வாக்கி-டாக்கி மீனவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. எதிர்காலத்திலே--சேட்டிலைட் லிங்க் என்று சொல்வார்கள்-ஒரு நெட் வொர்க்-அந்த அளவுக்கு ஒரு பேஸ்டு மேனரிலே--இரண்டு மீன்பிடி துறைமுகத்திலே தற்போது அமைக்கப்பட்டிருக்கிறது--எதிர்காலத்திலே எல்லா மீன்பிடி துறைமுகத்திலும் அமைக்கப்பட வேண்டியதற்கு கருத்து ஒன்று அரசினால் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. தற்போது இராமநாதபுரம் மாவட்டத்திலும் கூட இதுபோன்ற சிக்கலிலிருந்து மீனவர்கள் தொடர்பு கொள்வதற்கு வசதியாக நோடல் பாயிண்ட் என்று சொல்லக்கூடிய தொடர்பு முனை ஒன்றும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தப் பிரச்சினை இத்தோடு முடிவுபெறுகிறது.